## December 28, 2025 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. தாய்லாந்து- கம்போடியா இடையே எல்லை மோதலை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஒப்பந்தம் கையொப்பமானது. இந்தப் போர் நிறுத்தத்தின் கீழ், இரு தரப்பிலும் ராணுவ நடமாட்டங்கள், வான் எல்லை மீறல்கள் நிறுத்தப்பட வேண்டும்.

    i. 11-ஆம் நூற்றாண்டு ஹிந்து கோயில் அமைந்துள்ள ப்ரே விஹேர் உள்ளிட்ட பகுதிகளை பகுதிகலை மையமாகக் கொண்டு தாய்லாந்துக்கும், கம்போடியாவுக்கும் இடையே எல்லைப் பிரச்னை நீடித்து வருகிறது. அந்தக் கோயில் கம்போடியாவுக்குத் தான் சொந்தம் என்று சர்வதேச நீதிமன்றம் கடந்த 2008-இல் தீர்ப்பளித்தது. இருந்தாலும், இரு நாடுகளுக்கும் இடையே எல்லைப் பிரச்னை காரணமாக அவ்வப்போது மோதல் ஏற்பட்டுவந்தது. அதன் ஒரு பகுதியாக இரு நாடுகளுக்கும் இடையே கடந்த ஜூலை மாதம் 5 நாள்களுக்கு நீடித்த போரில் 48 பேர் கொல்லப்பட்டனர்; 3 லட்சம் பேர் அகதிகளாக்கப்பட்டனர்.

    ii. அதையடுத்து, டிரம்ப் முன்னிலையில் தாய்லாந்துக்கும் கம்போடியாவுக்கும் இடையே மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் கடந்த அக்டோபர் 26-ஆம் தேதி போர் நிறுத்த ஒப்பந்தம் கையொப்பமானது. மலேசியா பிரதமர் அன்வர் இப்ராஹிமின் முன்முயற்சியில் உருவான இந்த ஒப்பந்தம், தாய்லாந்துக்கும் கம்போடியாவுக்கும் இடையிலான எல்லை சர்ச்சையை தீர்க்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

    iii. ஆனால், கம்போடியா புதைத்துவைத்திருந்த கண்ணிவெடியில் சிக்கி தங்கள் நாட்டு வீரர் காயமடைந்ததாகக் குற்றஞ்சாட்டிய தாய்லாந்து, போர் நிறுத்த ஒப்பந்தத்தை நவம்பர் 10-ஆம் தேதி ரத்து செய்தது.

    iv. அதனைத் தொடர்ந்து தாய்லாந்தின் சிசாகெட் மற்றும் உபோன் ரட்சதானி மாகாணங்களில் உள்ள எல்லைப் பகுதிகளில், இரு தரப்பினரும் இந்த மாதம் 8-ஆம் தேதி மீண்டும் மோதலில் ஈடுபட்டனர். அதையடுத்து, கம்போடிய படைகள் தாய்லாந்து ராணுவ நிலைகள் மீது ஏறிகணைகளை வீசி தாக்குதல் நடத்தின. தாய்லாந்தும் கம்போடியாவில் தீவிர வான்வ ழித் தாக்குதல் நடத்தியது. இந்த மோதலில் பலர் உயிரிழந்தனர்.

    v. இந்தச் சூழலில், இரு தரப்பினருக்கும் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் தற்போது கையொப்பமாகியுள்ளது.

2. துணிவு, இரக்கம், தியாகத்தின் அடையாளம் குரு கோவிந்த் சிங் என்று பிரதமர் நரேந்திர மோடி புகழாரம் சூட்டியுள்ளார்.

    i. சீக்கியர்களின் 10-ஆவது குருவான குரு கோவிந்த் சிங்கின் பிறந்த தினம் (பர்காஷ் உத்சவ்) சனிக்கிழமை கொண்டாடப்பட்டது.

    ii. முகலாய ஆட்சிக் காலத்தில் இஸ்லாமிய மதத்துக்கு மாற மறுத்து வீரமரணமடைந்த குரு கோவிந்த் சிங்கின் மகன்கள் ஜோராவர் சிங், ஃபதே சிங் ஆகியோரின் நினைவாக, ஒவ்வோர் ஆண்டும் டிச. 26-ஆம் தேதி வீர பாலகர்

தினமாக (வீர பால திவஸ்) கொண்டாடப்படும் என்று கடந்த 2022-இல் மத்திய அரசு அறிவித்தது.

3. வெடிகுண்டு செயலிழப்பு அமைப்புக்கு பிரத்யேகமாக புதிய தர நிர்ணயத்தை இந்திய தர நிர்ணய ஆணையம் (பிஐஎஸ்) அறிமுகப்படுத்தியுள்ளது. மேலும், வெடிகுண்டுகளைச் செயலிழக்கச் செய்வதற்கான விரிவான வழிகாட்டு நெறிமுறைகளும் வெளியிடப்பட்டன.

   i. இதுகுறித்து மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'கொள்முதல் அமைப்புகள், உற்பத்தி மையங்கள் மற்றும் சோதனை மையங்கள் தாமாக முன்வந்து பின்பற்றவே வெடிகுண்டு செயலிழப்புக்கான புதிய தர நிர்ணயம் கொண்டுவரப்பட்டுள்ளது.

   ii. தற்போது நடைமுறையில் உள்ள சர்வதேச தரத்திலான வெடிகுண்டு செயலிழப்பு அமைப்புகள் அதிக அளவிலான கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளதால் இந்தியாவிலேயே பிரத்யேக தர நிர்ணயம் உருவாக்குவதற்கான தேவை ஏற்பட்டது. எனவே, இது இந்திய சூழலுக்கேற்ப சர்வதேச தரத்தில் உருவாக்கப்பட்டுள்ளது' எனத் தெரிவிக்கப்பட்டது.

   iii. இந்திய ராணுவம், மத்திய ஆயுதப் படைகள், மாநில காவல் துறை உள்ளிட்ட பாதுகாப்பு அமைப்புகள் வெடிக்காத வெடிகுண்டுகள், கையெறி குண்டுகளால் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டு வருகின்றன. இதைக் கையாள வெடிகுண்டு பிளாங்கெட், பேஸ்கட் மற்றும் இன்ஹிபிட்டர்ஸ் ஆகிய 3 வகையான வெடிகுண்டு செயலிழப்பு அமைப்புகள் பயன்படுத்தப்படுகின்றன.

   iv. இந்த அமைப்புகளை அரசு மற்றும் சில தனியார் நிறுவனங்கள் உற்பத்தி செய்தாலும் அவை சிறந்த தரத்தில் இருப்பதை உறுதிசெய்யவே இந்தப் புதிய தர நிர்ணயம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

4. மத்திய அரசின் '1915' என்ற தேசிய நுகர்வோர் உதவி எண் மூலம் 2025-ஆம் ஆண்டில் 67,265 நுகர்வோரின் குறைகளுக்குத் தீர்வு காணப்பட்டிருப்பதும், சுமார் ரூ.45 கோடி வரை மீட்கப்பட்டிருப்பதும் தெரியவந்துள்ளது.

   i. நுகர்வோர் தாங்கள் வாங்கும் பொருள்கள் மற்றும் சேவைகளின் குறைபாடுகள் தொடர்பாக புகார் தெரிவித்து நிவாரணம் பெற வசதியாக '1915' என்ற உதவி எண்ணை மத்திய அரசு அறிமுகம் செய்துள்ளது. இந்தக் கட்டணமில்லா புகார் எண்ணில் 17 இந்திய மொழிகளில் புகார் தெரிவித்து குறைகளுக்கான தீர்வைப் பெறமுடியும். மேலும் 8800001915 என்ற வாட்ஸ்ஆப் எண்ணுக்கு புகார் தெரிவித்தும் அல்லது நுகர்வோர் உதவிக்கான பிரத்யேக செயலி மூலமாகப் புகார் தெரிவித்தும் நுகர்வோர் தீர்வைப் பெற முடியும்.

   ii. இந்த நிலையில், கடந்த ஏப்ரல் மாதம் முதல் டிசம்பர் வரை '1915' உதவி எண் மூலமாக புகார் தெரிவித்து 67,265 பேர் குறைகளுக்குத் தீர்வு பெற்றுள்ளனர். இவர்கள் செலவழித்த ரூ.45 கோடி வரை மீட்கப்பட்டு, அவர்களுக்கு திரும்ப அளிக்கப்பட்டிருப்பது மத்திய அரசு சார்பில் வெளியிடப்பட்ட புள்ளிவிவரம்

மூலம் தெரியவந்தது.

iii. இதில் இணையவழி வணிகதளங்கள் மீது மட்டும் மூன்றில் இரண்டு பங்கு புகார்கள், அதாவது சுமார் 40,000 புகார்கள் தெரிவிக்கப்பட்டு, ரூ.32 கோடி மீட்கப்பட்டுள்ளது.

5. இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்குள் பாயும் செனாப் நதியில் புதியநீர் மின் திட்டத்தை அமைக்க மத்திய அரசின் பசுமைக் குழு ஒப்புதல் அளித்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

i. இந்த நதியில் 390 மெகாவாட் உற்பத்தித் திறனுடன் கூடிய நீர் 'துலாஸ்தி நிலை 1' என்ற பெயரிலான மின் திட்டம் மூலம் ஏற்கெனவே கடந்த 2007-ஆம் ஆண்டு முதல் மின் உற்பத்தி செய்யப்பட்டுவரும் நிலையில், தற்போது புதிதாக 260 மெகாவாட் உற்பத்தித் திறனுடன் 'துலாஸ்தி நிலை 2 என்ற இரண்டாவது மின் உற்பத் தித்திட்டத்தைச் செயல்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதற்கு ரூ.3,200 கோடி செலவாகும் என திட்ட மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

ii. மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் கீழ் இயங்கிவரும் நீர் மின் திட்டங்களுக்கான சுற்றுச்சூழல் நிபுணர் குழு, அண்மையில் நடைபெற்ற அதன் 45- ஆவது கூட்டத்தில் இந்த இரண்டாவது நீர் மின் திட்டத்துக்கான ஒப்புதலை அளித்துள்ளது. அதன்படி, முதல்நிலை நீர் மின் திட்டத்திலிருந்து 3,685 மீட்டர் நீளம் மற்றும் 8.5 மீட்டர் அகலம் உடைய தனி சுரங்கப் பாதை மூலமாக நதிநீர் திசைதிருப்பப்பட்டு புதிய இரண்டாம் நிலை திட்டத்துக்கு கொண்டு செல்லப்பட்டு மின் உற்பத்தி மேற்கொள்ளப்பட உள்ளது. இத் திட்டத்தைச் செயல்படுத்த 60.3 ஹெக்டேர் நிலம் தேவைப்படும் எனவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

iii. பசுமைக் குழு ஒப்புதல் அளித்துள்ள நிலையில், விரைவில் இந்தத் திட்டத்துக்கான ஒப்பந்தம் விடும் பணிகள் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

iv. சிந்து மற்றும் அதன் துணை நதிகளில் நீர்ப் பகிர்வை சுமுகமாக நிர்வகிக்க உலக வங்கியின் மத்தியஸ்தத் தின்பேரில் இந்தியா-பாகிஸ்தான் இடையே கடந்த 1960-இல் சிந்து நதி நீர் ஒப்பந்தம் கையொப்பமானது. அதன்படி, சிந்து நதியின் கிளை நதிகளான ஜீலம், செனாப் நதிகளின் நீரைப் பெறும் உரிமையை பாகிஸ்தான் பெற்றது. சிந்து நதியின் பிறகிளை நதிகளான ரவி,பீஸ், சட்லெஜ் ஆகிய 3 நதிகளின் உரிமையை இந்தியா பெற்றது. இந்நிலையில், கடந்த ஜம்மு-காஷ்மீரின் பஹல்காமில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து, பயங்கரவாத ஆதரவை பாகிஸ்தான் நிறுத்தும் வரை சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை நிறுத்திவைப்பதாக இந்தியா அறிவித்தது.

v. இந்நிலையில், சிந்து நதிநீர் ஒப்பந்தத்தை இந்தியா தொடர்ந்து மீறுவதாக பாகிஸ்தான் தரப்பில் அண்மையில் குற்றஞ்சாட்டப்பட்டது. 'சிந்து நதிநீர் ஒப்பந்தத்தை இந்தியா கடந்த ஏப்ரலில் தன்னிச்சையாக நிறுத்தி வைத்தது. இப்போது ஒப்பந்த மீறல்களில் இந்தியா ஈடுபட்டு வருகிறது. பாகிஸ்தானில் விவசாயப் பணிகளுக்கு முக்கியமான காலகட்டத்தில், செனாப் நீரோட்டத்தில்

இந்தியாவின் 'நியாய மற்ற செயல்பாடுகள்' அச்சுறுத்தலாக அமைந்துள்ளன. விளக்கம் கேட்டு இந்தியாவுக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது' என்று பாகிஸ்தான் துணைப் பிரதமரும் வெளியுறவு அமைச்சருமான இசாக் தார் அண்மையில் குற்றஞ்சாட்டினார்.

vi. இந்தச் சூழலில், செனாப் நதியில் புதிய நீர் மின் திட்டத்துக்கு சுற்றுச் சூழல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.